# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 52 — 1973 මාර්තු 23 වැනි සිකුරාදා — 1973.03.23

52 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 287 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 299 |


## பதவிகள்—வெற்றிடம்

*"ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக் குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"*

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பதும் அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—*(i) *இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

(ii) *நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

(iii) *ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—*(i) *சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/ உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/ சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

(ii) *புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுங்குவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

(iii) *(அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் அவர்கள் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

**முக்கிய அறிவித்தல்**

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

### கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

கண்டி மாவட்டத்தில் உள்ள கிராமசேவகர் சேவைப்பிரிவிலுள்ள வெற்றிடம் ஒன்றுக்கு கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் முஸ்லிம் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வெற்றிடம்.—அக்குரணை தேர்தல் தொகுதியில் நிரப்பப்பட வேண்டிய ஒரு (முஸ்லிம்) கிராம சேவகர் பதவி வெற்றிடம்.

3. சம்பளம்.—கீழேயுள்ள 8(iii) (ஜி) பந்தியில் விதிக்கப்பட்ட பயிற்சிக்காலத்தைப் பூர்த்தியாக்கியபின்னர் கிராமசேவகர், சேவைக்கு நியமிக்கப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் ஆண்டொன்றிற்கு 3,000 ரூபா சம்பள வீதம் ஆண்டு தோறும் 90 ரூபா சம்பள உயர்வுகளுடன் 5,160 ரூபாவாக உயரும் திரட்டிய சம்பளத்தில் நியமிக்கப்படுவர். இந்த அளவுத் திட்டத்தில் 3,810 ரூபாவிற்கு முன்னர் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை ஒன்று நடைபெறும்.

4. தகைமை.—(1) பரீட்சார்த்திகள் சீரிய ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும். அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் எல்லா நோக்கங்களின் பொருட்டு "இலங்கையர்" என்னும் சொல் வமிசாவழியாக அல்லது பதிவுவழியாக இலங்கைப் பிரசையாக இருப்பவர் எனப் பொருள்படும்;

(3) பரீட்சார்த்திகள் ஒரு கிராமசேவகரின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய உடல்நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்;

(4) பரீட்சார்த்திகள் (அ) இலங்கைச் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும்/எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச் சித்திபெற்றிருத்தல் வேண்டும்; அல்லது,

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது பாடங்களில் சித்தி பெற்ற கல்விப்பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்; அல்லது,

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலோ அல்லது தமிழ் மொழியிலோ தமது சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

5. பரீட்சார்த்திகள் 1973.04.30 ஆந் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவோ 35 வயதிற்குக் கூடியவர்களாகவோ இருத்தலாகாது. அரசாங்க சேவையில் நிரந்தரமாக நியமனங்களை உடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திகள்.—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் அக்குரணை தேர்தல் தொகுதியில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராமசேவகரிடம் இருந்து பெற்ற பதிவிடச் சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம்; அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் அக்குரணை தேர்தல் தொகுதியில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும்; அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் அக்குரணை தேர்தல் தொகுதியில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்பட வேண்டும்.

குறிப்பு.—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாது. மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

5. **தெரிவுசெய்யும் முறை.**—நியமனத்திற்கான பரீட்சார்த்திகள் கீழே 7 ஆம் பந்தியில் விதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் காட்டிய செயல்திறனுடன், கீழே 6 ஆம் பந்தியில் விபரித்தவாறு சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது தரவாரி முறையின் பேரிலான உயர் தரப்பரீட்சையில் பெற்ற தரங்களின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்.

6. **தரவாரித் திட்டம்.**—சி.பா.த. பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் பெறப்பட்ட தரங்களின் பொருட்டு ஒதுக்கப்படும் புள்ளிகள் வருமாறு :—

புள்ளிகள்

டீ—விசேடசித்தி—75

சீ—திறமைச்சித்தி—50

எஸ்—சாதாரணதர சித்தி—40

ஆறுக்கு மேற்பட்ட பாடங்களில் தோன்றிச் சித்தியடைந்தவர்கள் ஆறு பாடங்களுக்கு மாத்திரம் தோன்றி சித்தி அடைந்தவர்கள் பெறும் மொத்தப் புள்ளிகளைத் தவிர்த்தற்பொருட்டுப் பரிசீலனை செய்யப்பட வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை விண்ணப்பத்தில் ஆறு பாடங்கள் என வரையறுக்கப்படும்.

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்துள்ள பரீட்சார்த்தி ஒருவர் மேலதிகமாக 30 புள்ளிகள் பெற உரித்துடையவராவர். எனினும், க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குக் குறைவாகச் சித்தியடைந்தவர்களுக்கு அல்லது திறமைச் சித்திகள், விசேட சித்திகள் முதலியனபோன்ற இப்பாடங்களிற் பெறப்பட்ட தரத்தின் பொருட்டுப் புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. இளங்கலைஞாப பட்டம் அல்லது ஏதாவது உயர்ந்த பட்டம் பெற்றவர்களுக்கு மேலதிகமாக 70 புள்ளிகள் கொடுக்கப்படும். அது க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மேலதிகமாக 30 புள்ளிகளையும் உள்ளடக்கும். இளங்கலைஞாப பட்டத்தையுடைய பரீட்சார்த்திகளுக்கு க.பொ.த். (உயர்தரம்) விற்காகப் புள்ளிகள் ஒதுக்கப்படமாட்டாது. இங்கு குறிப்பிடப்படாத ஒன்றிற்கு மேற்பட்ட பட்டம் அல்லது ஏதேனும் கல்வித் தகைமையின் பொருட்டு மேலதிகபுள்ளிகள் ஒதுக்கப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட தரவாரியான திட்டத்திற்கு இணங்க விண்ணப்பப்படிவத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூடுகளில் பரீட்சார்த்திகள் தாமாகவே புள்ளிகளைத் தரப்படுத்தவேண்டும்.

7. **நேர்முகப் பரீட்சை.**—(i) 200 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கவேண்டும்.

(iii) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்.

8. **சேவை நிபந்தனைகள்.**—(i) அரசாங்க வர்த்தமானி பகுதி I பிரிவு (IIஅ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் அற்றவையாகும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி தன்னுடைய திரட்டிய சம்பளத்தில் 6% அரசாங்க சேவை சகாய நிதிக்கு செலுத்தல் வேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவுதொகை 9% ஆகும்.

(iii) அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி அரசாங்க சேவைக்குப் புதியவராக இருப்பின் :—

(அ) அவருடைய தகுதிகாண் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தினதும், அரசாங்க அரசகரும மொழிக் கொள்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக இப்போதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கும் அமைய இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்கு உட்படுதல் வேண்டும் ;

(இ) தகுதிகாண் கால்த்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—தொழில் ஆற்றும் அறிவை அவர் பெறல் வேண்டும் ;

(ஈ) தகுதிகாண் கால முடிவில் அவரது வேலையை உறுதிப்படுத்தல் பிறவற்றுக்கிடையில் அவர் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரச் சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளை முறையே நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுகளுக்கிடையில் (அல்லது பொருத்தமானபோது 1 ஆம், 2ஆம் தரங்களை முறையே ஒரு வருடத்திலும், இரண்டு வருடத்திலும்) அவர் சித்தியெய்துவதிலேயே தங்கி உள்ளது.

விதிக்கப்பட்ட காலத்திற்குள் இத்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறின் ஆண்டேற்றங்கள் இடைநிறுத்தப்படும். அப்படியான நிறுத்தம் சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளில் தேர்ச்சிபெறும்வரை அல்லது கீழே பந்தி (iii) (உ) இல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய குறிப்பிட்ட காலம் வரை நடைமுறையில் இருக்கும் ;

(உ) தகுதிகாண் கால முடிவில் சிங்களத் தேர்ச்சியில் குறிப்பிட்ட தரத்தைப் பெருவிடின் 8 (iii) (அ) நிருவாகப் பிரமாணம் 2 ஆம் அதிகாரத்தின் 10 :12 பிரிவு பொருத்தமுடையனவாகும். மேலே (இ), (ஈ), (உ) இல் உள்ள நிபந்தனைகள் சிங்கள மொழிமூலம் சேவையிற் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தா ;

(ஊ) கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நிருவர்க மாவட்டத்தின் எக்கிராம சேவகர் பிரிவுக்கும் இடமாற்றத்திற்குள்ளாவர் ;

(எ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் யாவரும் அவர்களின் நியமனத்தின் பின் செய்யவேண்டிய கடமைகளில் பயிற்சி பெறல் வேண்டும். தற்காலிக, கிராம சேவகர்களின் நியமனங்கள், பரீட்சார்த்தி திருப்திகரமாகத் தனது பயிற்சியை பூர்த்தி செய்துள்ளார் என்றும், தகுதிகாண் கிராமசேவகர்களாக நியமனஞ் செய்யப்படுவதற்கும் சகல முறைகளிலும் தகுதி உடையவர் என்றும் குறிப்பிட்டு நிருவாக மாவட்டத்திற்கும் பொறுப்பாகவுள்ள அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பேரிலேயே செய்யப்படும். ஆரம்பத் தெரிவின்போது இப்பரீட்சார்த்தியின் பயிற்சிக்காலம் மூன்று மாதங்களுக்கு மேற்படாது என்பதுடன், எல்லாப்படிகளும் உட்பட மாதம் ஒன்றிற்கு 50 ரூபா என்ற விகிதத்தில் பயிற்சி பெறுவோருக்கும் கொடுக்கப்படும். பயிற்சிக்காலத்தில் பரீட்சார்த்திகள் விடுமுறைச் சலுகைக்கு உரித்துடையராகார் ;

(ஏ) பயிற்சிக்குப் பின் கிராமசேவகர் ஒருவர் கிராம சேவகராக மூன்றாண்டு சேவையைப் பூர்த்தியாக்கும்வரை அவரது நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது. மேலும், அவர் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அரசாங்க அதிபர் திருப்தி அடையும் வரையும் அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப் படமாட்டாது.

9. விண்ணப்பங்கள்.—(i) இக்கச்சேரியிலிருந்து அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் அலுவலகம் எதிலிருந்தும் விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளலாம். மேற்போந்த 4(ii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தகுதிப் பரீட்சையை எம்மொழியில் சித்தியடைந்தார்களோ அம்மொழியில் அல்லது தமது விருப்பத்தின்பேரில் சிங்கள மொழியில் தம் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சார்த்திகள் நிரப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவத்தைப் பரீட்சார்த்திகள் எவ்வகையிலும் திருத்தஞ் செய்தற்குத் தடுக்கப்பட்டுள்ளனர். பொருத்தமான படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பங்கள், அரசாங்க அதிபர், கச்சேரி என்னும் முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையத்தக்கதாய் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை நேரடியாக அரசாங்க அதிபருக்குக் குறிப்பிட்ட திகதியில் கிடைக்கக்கூடியதாக அனுபபுதல் வேண்டும். விண்ணப்பப் பிரதியொன்று விண்ணப்பதாரரின் திணைக்களத் தலைவருக்கூடாகவும் அனுப்பப்படல் வேண்டும் ;

(iii) குறிப்பிட்ட தேதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அரசாங்க அதிபருக்கு அல்லது கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவருக்கும் தனிப்பட்ட சொந்த முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

10. தகைமைச் சாதனங்கள்.—(i) விண்ணப்பத்துடன் எவ்வகையான சாதனங்களும் அனுப்பப்படலாகாது. கோரப்பட்டவாறான படிவத்தில் தேவையான விபரங்கள் தரப்படுதல் வேண்டும். இவ்வகையில் நிறைவாக இல்லாத ஒரு விண்ணப்பம், அதன் சொந்தத் திறமைகளின் பேரில் பரிசீலனை செய்யப்படுவதோடு, நிராகரிக்கவும் படலாம் ;

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தகைமையடைந்த பரீட்சார்த்திகளிடமிருந்து தகவுத் திறனை நிரூபிப்பதற்கு சாதனச் சான்று காட்டுமாறு கேட்கப்படுவர். இத்தகைய பரீட்சார்த்திகள் அச்சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டால். சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும் ;

(iii) பின்வரும் சாதனங்கள் அவசியமானவையாகும் :—

(அ) நற்பண்புச் சான்றிதழ்,

குறிப்பு.—பரீட்சார்த்தி ஒருவர் அரசாங்க அல்லது உதவிபெறும் பாடசாலையில் இருப்பின் அல்லது அத்தகைய பாடசாலையில் இருந்து அண்மையில் விலகி இருப்பின், அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்து நற்சான்றிதழைப் பெறுதல் வேண்டும் ; அவ்வாறில்லாதவிடத்து அதைச் சமாதான நீதவான், வழக்குரைஞர் (அப்புக்காத்து), வழக்கறிஞர் (பிரக்ராசியார்) அல்லது நொத்தாரிசு, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது ஆண்டுக்குத் திரட்டிய சம்பளமாக 4,800 ரூபா அல்லது அதற்கு மேற் பெறும் ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாகக் கூறின், நன்கு அறியப்பட்டவரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளக்கூடியவருமான யாரேனுமொருவர் ஆகியவர்களில் எவ்ராவது ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். சான்றிதழ் வழங்குபவரின் பெயர், பதவிப் பெயர், முகவரி ஆகியவை தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்.

ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார். ஆனால், அவர்கள் தமது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமானவை என்றும் நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டால் அவர்களைச் சேவை ஒப்புக்கொள்ளவிடமுடியுமென்றும் கூறுமொரு சான்றிதழைத் தமது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்பு பதிவுச் சான்றிதழ் அல்லது (பிறப்புப் பதியப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் அதிபதியினால் ஒன்றினைச் சமர்ப்பிக்கமட்டுமே முடிந்த எப்பரீட்சார்த்தியினதும் பிறந்த திகதி, அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த ஆண்டின் யூலை 1 ஆம் திகதியாகக் கருதப்படும் ;

குறிப்பு.—(i) பாடசாலை அல்லது கல்வி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட விசேடப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட பிரித்தெடுத்த குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) சத்தியக் கடுதாசிகளோ, ஞானஸ்ஞானச் சான்றிதழ்களோ பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமர்ட்டா.

(iii) பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் பரீட்சார்த்தி விண்ணப்பிப்பதற்குக் கொடுத்துள்ளதுமான பெயர்/பெயர்களிலிருந்து வேறுபட்டால் பிறப்பு பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு விடயத்திற்கேற்றவாறு (110 ஆம் அத்தியாயமாம்) பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை, 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் திகதியின் 394 ஆம் இலக்கத் திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தமது பெயர்களை மாற்றியுள்ளவர்களுமான பரீட்சார்த்திகள், திருத்தப்பட்ட பிறப்புப் பதிவேட்டிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கப்பட மாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவுச் சான்றிதழ் அல்லது வம்சாவழியினர் என்னும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான உத்தியோக பூர்வமான மூலக் கடிதம் (ஏற்புடைய விடத்து).

(ஈ) கல்வித் தகைமை பற்றி மூலச் சான்றிதழ், அல்லது சான்றிதழ் வழங்கப்படாதவிடத்து, பிற உத்தியோகபூர்வமான சாதனங்கள், எடுத்துக்காட்டாக தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட இலங்கை க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சைப் பெறுபேற்று நறுக்கு அல்லது விண்ணப்பதாரரின் பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற மூலக்கடிதம்.

(உ) மேலே 4 (ii) இன் கீழ் உள்ள தகைமையை நிரூபிக்கும் சான்றிதழ்கள் ;

(iv) விண்ணப்பம் செய்யும் போது தேவையான சாதனங்கள் யாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு மதியுரை கூறப்படுகின்றது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான சாதனங்களைச் சமர்ப்பிக்க முடியாதிருக்கும் அல்லது அவற்றைச் சமர்ப்பிக்கத் தாமதிக்கும் பரீட்சார்த்தியினது, விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

11. பொய்யான விபரங்கள் கொடுப்பதற்குரிய தண்டனை—இவ்வறிவிப்பில் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவராக காணப்பட்டால் தெரிவு செய்தற்கு முன்போ தெரிவு செய்த பின்போ எந்நிலையிலாவது அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்குப் பாத்திரமாகும்.

பரீட்சார்த்தியொருவரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் எவையேனும் அவரறிந்த வரையில் பொய்யெனக் காணப்பட்டால் அல்லது வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால் அல்லது அவரின் சேவைக் காலத்தில் எப்பொழுதாவது அவர் விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென்று நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையில், இருந்து உடனே நீக்கப்படுவதற்குப் பாத்திராவார். இவ்வறிவிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி ஒழுகாதோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மருத்துவப் பரிசோதனை.—நியமனத்தின் பொருட்டுத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கேற்ற உடற்றகுதி அவர்களுக்கு உண்டென்பதைக் காட்டுவதற்கு மருத்துவப் பரிசோதனையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர். மருத்துவ்ப் பரிசோதனையில் தவறும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்.

13. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயமும் அரசாங்க அதிபரின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

எஸ். மாரந்த,
அரசாங்க அதிபர்.

கச்சேரி,
கண்டி,
1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம்.

3-965—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

## கடற்றொழில் திணைக்களம்

### நாவாய்ச் சிற்பி/நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர்

கடற்றொழில் திணைக்களத்தில் நாவாய்ச் சிற்பி/நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, காலிமுகம், கொழும்பு 3 என்ற விலாசத்தை வந்தடையவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 ஏப்பிரல் 25

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்—1973 ஏப்பிரல் 25

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் வரும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.

(2) கடல்கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினால் அந்நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில், இலங்கைக் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(3) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு, தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

நாவாய்ச் சிற்பி—(i) நாவாய்ச் சிற்பி பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம் 3 ஆண்டுகாலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தவேண்டும். எனினும் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெறும் வாய்ப்புடையவராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பதில் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குத் தகைமையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தில் எக்காலத்திலும் அவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர்—

(i) தெரிவு செய்யப்படும் நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர் வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். பயிற்சிக் காலம் அண்ணளவாக 3 ஆண்டுகளாகும். ஆனால் சந்தர்ப்பத்துக்கேற்ப இக்கால எல்லை குறைக்கப்படலாம் அல்லது கூட்டப்படலாம். பயிற்சி நெறியின் போது, படி அந்நேரத்தில் இருக்கும் அரசாங்கப் பிரமாணங்களுக்கு அமைய செலுத்தப்படும்.

(ii) நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர் 5 வருடங்களுக்குள் சென்ற் ஜோன்ஸ் நியூபௌண்லண்ட் கடற்றொழில், கப்பலோட்டற் கடலக எந்திரவியல், இலத்திரனியல் கல்லூரியால் அளிக்கப்படும் டிப்ளோமா சான்றிதழைப் பெறவேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும். (அரசாங்க உத்தியோகத்தரல்லாதோர் இரு பிணைகாரருடன் உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும்.)—

(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியைப் பிரமாணிக்கத்துடனும், ஊக்கத்துடனும், கடைப்பிடித்து திருத்தியான முறையில் பூரணப்படுத்துவதாகவும் வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் இலங்கைக் குடியரசால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கைக் குடியரசுக்குச் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்பதோடு,

(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும் விதிகட்கும் இயைய நடக்கத்தவறின், பயிற்சி நெறியின் முழுச் செலவையும் அதாவது இலங்கைக் குடியரசாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையாலோ அல்லது அவ்வப்பகுதியில் கூட்டினுலுமோ இப்பயிற்சிநெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவை (அஃதாவது, சம்பளம், படி, பிரயாணச் செலவுகள், கட்டணங்கள், முதலியவை), இலங்கைக் குடியரசுக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப்பேற்பதாகவும்,

இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபட வேண்டும்.

3. சம்பளமும், படிகளும்.—இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு.—

(i) நாவாய்ச் சிற்பி—வருடமொன்றுக்கு ரூபா 7,800—360 × 3—ரூபா 8,880/ரூபா 9,600—360 × 4—480 × 11—ரூபா 16,320 ஆகும். ரூபா 9,600 க்கும் ரூபா 13,920 க்கும் முன்னர் விணைத்திறமைகாண் தடையுண்டு.

(ii) நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர்—மாதமொன்றுக்கு திரட்டிய நிலையான படியாக ரூபா 300 வழங்கப்படும் (நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர் நாவாய்ச்சி சிற்பி பதவிக்குத் தேவையான தகைமையைப் பெற்றதன் பின்னர் இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்துதற்கு தகுதியுடையவராவர்).

4. தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும் :—

(1) நாவாய்ச் சிற்பி :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ஏப்பிரல் 25 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்கு ஏற்புடைத்தன்று).

(இ) (i) எப். ஆர். ஐ. என். ஏ. (நாவாய்ச் சிற்பிகளின் அரச வித்தியாதிகார சபை அங்கத்தவர்) உடன் நாவாய்ச் சிற்பி உயர் தேசிய சான்றிதழும் ;

அல்லது

(ii) எம். ஆர். ஐ. என். ஏ. (நாவாய்ச் சிற்பிகளின் அரசவித்தியாதிகார சபை உறுப்பினர்) உடன் உயர் தேசிய சான்றிதழும் ;

அல்லது

(iii) சென்ற் ஜோன்ஸ் நியூபௌண்லண்ட் கடற்றொழில், கப்பலோட்டார் கடலக எந்திரவியல், இலத்திரனியல் கல்லூரியால் அளிக்கப்பட்ட கடற்படைக் கட்டடக் கலைஞர் தொழினுட்பவியல் டிப்ளோமா.

(2) நாவாய்ச் சிற்பி—பயிற்சியாளர்—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 ஏப்பிரல் 25 ந் தேதியன்று 19 வயதுக்குக் குறையாதவராயும் 25 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் பௌதிகவியல், கணிதம் உட்பட 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஈ) க. பொ. த. (சாதாரண) பத்திரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம், பௌதிகவியல் பாடங்களில் விசேட சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. கேட்கப்படும் பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழோ உதவிபெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுரையாளரிடமிருந்தோ பேராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள்ளடங்கிய இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்.

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ்/அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவத்துடன் எச்சாதனமோ, சாதனங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(2) கேட்கப்படும் பொழுது சாதனங்களை வழங்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. இலங்கைக் குடியரசுச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தில் ஒரு பிரதியை, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு, முடிவுறுந் தேதியன்று அல்லது அதற்கு முன்னம் அவரைச் சென்றடையுமாறு நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும் இது சார்ந்த தொடர்புகளும் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகாது.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அபேட்சகருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெறாவிடின், கொழும்பு-3, காலி முகத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் செலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு,

கடற்றொழில் அமைச்சு,
காலிமுகம்,
கொழும்பு-3, 1973 மார்ச் 13.

### கடற்றொழில் திணைக்களம்

நாவாய்ச் சிற்பி/நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர்

பதவிக்கான விண்ணப்பப் படிவம்

குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையின் இடப் பக்கத்து மேன் மூலையில் "நாவாய்ச் சிற்பி/நாவாய்ச் சிற்பி பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதிப் பதிவு அஞ்சலில் செயலாளர், கடற்றொழில் அமைச்சு, த. பெ. எண் 1707, காலி முகம், கொழும்பு-3 என்ற முகவரிக்கு அதை அனுப்பவேண்டும்)

1. முழுப்பெயர் :———.
2. முகவரி :———.
3. பிறந்த திகதியும் இடமும் :———.
   1973 ஏப்பிரல் 25 இல் வயது : ———ஆண்டு ——— மாதம் ——— நாள்.
4. நாட்டினம் :———.
5. விவாகமானவரா, தனியாளரா ? : ———.
6. கல்வித் தகைமைகள் :———.
7. தொழிற்றுறைத் தகைமைகள் :———.
8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் (தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும், விடுவதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்) : ———.
9. தற்போதய தொழில் :———.
10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிகளும் : ———.
11. வேறு ஏதாவது தகைமைகள் :———.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களும் எவையாவது பொய்யானவையோ சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள்ளேன்.

———,
ஒப்பம்.

திகதி.———.

3 955—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### வளிமண்டல ஆய்வுத் திணைக்களம்

வளிமண்டலவியலாளர் பதவி

ஸ்ரீலங்கா (இலங்கை) குடிகளிடமிருந்து வளிமண்டல ஆய்வுத் திணைக்களத்திலுள்ள வளிமண்டலவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன கீழ்க்காணப்படும் படிவத்திலமைந்த தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், பதிவு செய்யப்பட்ட தபாலில், செயலாளர், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, அ. அ. பெட்டி 570, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பின்வரும் தேதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—1973.04.25.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1973.05.02.

குறிப்பு.—(1) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(2) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள ஸ்ரீலங்காவின் (இலங்கை) பிரதிநிதியின் அலுவலகத்திற்கு ஸ்ரீலங்கா (இலங்கை) யிலுள்ள கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(3) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—ஸ்ரீலங்கா (இலங்கை) அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா (இலங்கை) உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் ஸ்ரீலங்காவிற்குப் (இலங்கை) பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—

(அ) பதவி நிரந்தரமானது. நியமனம் பெறுபவர் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவும் தொகையைக் கொடுத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்று வருட காலம் தகுதிகாண் நிலையில் சேவையில் அமர்த்தப்படுவர்.

(ஆ) கடமைகளுள் வளிமண்டல ஆய்வு, வானியல், கடிகாரவியல், பூமிநடுக்கவியற்கான வழுவிற் கருவிகளின் உபயோகங்களும் வளிமண்டல ஆய்வு அவதானிப்புகள், மற்றும் வேறு அவதானிப்புகளின் கணிப்பு, சரிபார்த்தல், அட்டவணைப்படுத்தல் சம்பந்தப்பட்ட புள்ளிவிபர வேலைகளும், காலநிலை முன்னறிவிப்புப் பணியும் உட்பட்டிருக்கும்.

(இ) கடமை நேரங்கள் இரவிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரசாங்க விடுமுறை நாட்களிலும் இருப்பினும், அதற்கென மேலதிகக் கொடுப்பனவு நடைபெறமாட்டாது. அரசாங்க விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்காகப் பதில் விடுதலை அனுமதிக்கப்படும்.

(ஈ) நியமிக்கப்பட்டவர், தேவைப்படின் காலநிலை முன்னறிவிப்பிலும், அதைச்சார்ந்த பாடங்களிலும் வெளிநாட்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தில் பயிற்சிநெறி பெற வேண்டும். நியமிக்கப்பட்டவர் வெளிநாட்டில் படிப்பு நெறியை மேற்கொள்வதற்குரிய உடல், மனநிலையுடையவரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மேலும் மருத்துவச் சோதனையில் தகுதிகாணல் வேண்டும். பயிற்சி பெற நாட்டை விட்டுப்போகுமுன் ஒரு பிணையும், உடன்படிக்கையும் செய்யுமாறு வேண்டப்படுவர்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் பின்வருமாறு :—வருடச்சம்பளம் ரூபா 7,440 இல் ஆரம்பமாகி, வருடம் ரூபா 360 கொண்ட 10 உயர்வுகளும், வருடம் ரூபா 480 கொண்ட 11 உயர்வுகளுடன் வருடச்சம்பளம் ரூபா 16,320 வரை செல்வதுடன் வருடச்சம்பளம் ரூபா 12,000 க்கும் ரூபா 14,880 முன் வினைத் திறமைகாண் தடைகளுமுண்டு.

குறிப்பு.—குறித்த மேற்பட்டதாரிப் பட்டம் அல்லது அவருடைய விஞ்ஞானத்துறையில் உயர்தரத்தில் டிப்புளோமா பட்டம் பெற்றிருந்தாலன்றி தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஆண்டொன்றுக்கு 11,520 ரூபா சம்பளத்திற்கு அப்பால் செலுத்துவதற்குத் தகுதியற்றவராவார்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1972.06.19 ந் தேதியில் 20 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பௌதிகம் அல்லது கணிதம் முக்கிய பாடமாகக் கொண்ட விஞ்ஞான விசேடப் பட்டதாரியாக அல்லது முதலாவது அல்லது இரண்டாவது பிரிவில் பௌதிகம், கணிதமாகிய பாடங்களைக் கொண்ட விஞ்ஞானப் பொதுப் பட்டதாரியாக, அல்லது தகுதியான மேற்பட்டதாரித் தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது போராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிப்பந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை உடையராகார்.

எம். சிவநாதன்,
செயலாளர்,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு,
அஞ்சல் பெட்டி 570,
48, ஸ்ரீஜினரத்தின வீதி,
கொழும்பு 2, 1973.

வளிமண்டல ஆய்வுத் திணைக்களத்திலுள்ள வளிமண்டலவியலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

(கவனிக்கவும்.—விண்ணப்பத்தைத் தாங்கும், உறையின் இடது பக்க மேல் மூலையில் “ வளிமண்டல ஆய்வுத் திணைக்களத்திலுள்ள வளிமண்டலவியலாளர் ” பதவிக்கு விண்ணப்பம் என குறிக்கப்படுவதுடன், அது கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் செயலாளரின் முகவரியிடப்பட்டும் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்)

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————. (பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படி இணைக்கப்பட வேண்டும்)
4. நாட்டினம் :————.
5. மணவாளரா, தனியாளரா ? :————.
6. கல்வித் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை அல்லது இவ்விரண்டும் :————. (சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படவேண்டும்)
7. கல்விக்கூடத்தை விட்டு விலகியதிலிருந்து பெற்ற தொழில் அல்லது பயிற்சி அல்லது இவ்விரண்டுக்குமுரிய விபரங்கள் :————.
8. இதன்முன் அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றிலோ தொழிலாற்றியிருப்பின் அந்தவிட்டு விலகிய காரணத்தை கூறவும் :————.
9. எப்பொழுதாவது நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அத்தவற்றையும் தண்டனையையும் பற்றிய விபரங்களைத் தருக :————.
10. குணச்சான்றிதழ்கள் பெற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட இருவரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

————,
கையொப்பம்.

திகதி :————.

3–928—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

வன திணைக்களம்

வேலைத்தல முகாரியின் பதவி

வன திணைக்களத்தின் ஆராய்ச்சிக் கல்விக் கிளையில் ஓர் வேலைத்தல முகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்பப்பட்டு வனபாதுகாவல் அதிபர், த. பெ. இல. 509, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதியோ அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. சம்பள விகிதம்.—இப்பதவிக்கான திரட்டிய சம்பளம் ரூபா 4,152—144 × 16—6,456 ஆகும்.

3. தேவைப்படும் தகைமைகள்.—

(அ) விண்ணப்பதாரர் 20 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாடு ஏனைய தகைமைகளைப் பெற்றிருக்கும் இத் திணைக்கள ஊழியரைக் கட்டுப்படுத்தாது)

(ஆ) (1) தூயகணிதமும் பௌதிகமும் பாடமாயமைந்த சிரேட்ட தராதரப் பத்திரமோ அல்லது அதேபோன்ற தராதர முடையவராகவும் (பொறியியல் விஞ்ஞானத்திலோ அல்லது பிரயோக கணிதத்திலோ சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை காட்டப்படும்.)

(2) கனிட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் உடையவர் (கட்டுப்பத்தையிலுள்ள இலங்கைத் தொழில்நுட்பமுறைக் கழகத்தின் செயல்முறைத் தொழில்நுட்பக் கல்லூரியின் பொறிமுறை அல்லது மின்சார எந்திரவியல்) அல்லது அம்பாறையிலுள்ள காடி சிரேட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தகுதித் தேர்வுப் பத்திரம் (பொறிமுறையும் மின்சாரமும்) உடையவர். அல்லது கல்வி அமைச்சின் ஏதாவது ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில் பொறிமுறையிலும் மின்சார எந்திரவியலிலும் மூன்று வருடமாக மாலைப் படிப்பைத் திருப்திகரமாக முடித்த சான்றிதழ் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. சேர்வு நியதிகள்—பதவி நிரந்தரமானது. பணிசெய்பவர் அரசாங்கசேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை வழங்கல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களோடு கீழ்க் காணும் பத்திரங்களின் பிரதிகள் (மூலம் பிரதிகளல்ல) இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புப்பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானம் செய்யும்போது கொடுக்கும் பத்திரங்களும் உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய விதிகட்கு அமையக் கொடுக்கப்படும் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் குணம், பதவிக்குப் பொருத்தம் பற்றிய சமீபத்தில் பெறப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இச் சான்றிதழ் சமர்ப்பிக்கும்படி கோரப்பட மாட்டார்கள்)

6. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ம் பகுதி, II ம் தொகுதி ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

7. குறிப்பிட்ட திகதிக்குப் பின் வந்து சேரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

8. விண்ணப்பங்களோ அன்றி இப்பதவி பற்றிய வேறு எவ்வித கடிதத் தொடர்புகளோ வனபாதுகாவல் அதிபருக்கே அனுப்பப்பட வேண்டும். இத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவருக்காவது தனிப்பட்ட விலாசத்திற்கு அனுப்பக்கூடாது.

டபிள்யூ. ஆர். எச். பெரோரா,
வன பாதுகாவல் அதிபர்.

வன பாதுகாவல் அதிபரின் அலுவலகம்,
த. பெ. இல. 509,
கொழும்பு 2,
1973 மார்த்து 14.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

1. முழுப் பெயர் :————.
(தடித்த எழுத்தில்)
2. விலாசம் :————.
3. பரம்பரையாக இலங்கையரா அல்லது பதிவால் இலங்கையரா ? :————.
4. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 1973 ஏப்ரல் மாதம் 28 ம் திகதி வயது—
வருடங்கள் :———— மாதங்கள் :————.
5. தற்பொழுது ஏதாவது பதவியிலிருந்தால் அதன் விபரம் : ————.
6. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :————.
7. சிறப்புத் தகைமைகள் ஏதும் இருப்பின் அவை :————.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

3–963—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**கமத்தொழிற்றிணைக்களம்**

**பொருளாதார உதவியாளர்கள் பதவி**

கமத்தொழிற்றிணைக்களத்திற்கான பொருளாதார உதவியாளர்கள் பதவிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டதற்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 14 ஏப்பிறில் 1973 ல் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பளமட்டம்

பதவிக்கான திரட்டிய வேதனம் வருடாந்தம் ரூபா 4,296—144 ×16 உம் 180×7 ரூபா 7,860 வினைத்திறமைகாண் தடைகள் ரூபா 5,448 உம் ரூபா 6,600 க்கும் முன்னதாக அமையும்.

3. தொழில் நிபந்தனைகள்

பதவி நிரந்தரமானது. ஆனுல் உபகாரச் சம்பளம் அற்றது. நியமனம் மூன்று வருட காலத்திற்கு பார்வைக்குட்பட்டதாக இருக்கும்.

4. தேவையான தகைமைகள்

(அ) திறமான நல்நடத்தையும் தேக வலுவும் உள்ளவர்

(ஆ) 24 மார்ச் 1973 ல் 23 வயதுக்குக் குறையாமலும் 35 க்கு கூடாமலும் உள்ளவர். (ஏற்கனவே பொதுச் சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை பிரயோகமாகாது.)

(இ) (i) மதிக்கப்பெற்ற பல்கலைக்கழகத்தின் விவசாயப் பொருளாதாரத்தில் அல்லது விவசாயம் அல்லது மிருக வளர்ப்பில் அல்லது பொருளாதாரம் அல்லது கணிதத்தில் பட்டம் பெற்றிருப்பவர்.

அல்லது

(ii) பொருளாதாரத்தை ஒரு பாடமாகக்கொண்டு மதிக்கப்பெற்ற பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பதோடு 2 வருட காலத்திற்குக் குறையாமல் கமத்தொழில் திணைக்களத்தில் கடமையாற்றி இருப்பவர் என்று ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஆதாரப்படுத்த வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் பிரதிகளை அனுப்பவேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ii) கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(iii) அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள். (இப் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.)

6. இவ் வர்த்தமானியின் பகுதி I பிரிவு II ன் முற்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பொதுசேவை நியமனங்களுக்கான நிபந்தனைகளைக் கவனத்திற்கொள்ளவும்.

பி. ரி. ஜினேந்திரதாச,
கமத்தொழிற் பணிப்பாளர்.

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை,
20, பெப்ரவரி 1973.

**பொருளாதார உதவியாளர்கள் பதவிக்கான மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

(குறிப்பு.—விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது கோடி மூலையில் "பொருளாதார உதவியாளர்கள் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதி பிரதி கமத்தொழில் பணிப்பாளர் (பரிபாலனம்) பேராதனை என விலாசமிட்டுப் பதிவுத் தபாலில் விண்ணப்பத்தை அனுப்பவேண்டும்)

1. முழுப் பெயர் :————.
2. விலாசம் :————.
3. பிறந்த திகதியும் இடமும் (பிறப்புப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும்) :————.
4. தேசியம் :————.
5. விவாகம் செய்தவரா அல்லது தனித்தவரா ? :————.
6. கல்வி/அல்லது தொழில்நுட்ப தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
7. பாடசாலையை விட்டதிலிருந்து செய்த தொழிலின் அல்லது பயிற்சியின் விபரங்கள் :————.
8. அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பொதுக் கூட்டுத்தாபனத்தில் முன்னர் கடமையாற்றியிருந்தால் விலகியதற்கான காரணத்தைக் தருக :————.
9. நீதிமன்றத்தில் கிரிமினல் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருந்தால் குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைத் தருக :————.
10. நல்நடத்தைச் சான்றிதழ்கள் தந்த மூவர்களின் பெயரும் பதவி நிலையும் தருக :————.

————,
கையொப்பம்.

திகதி :————.

3–830—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

### அணுசக்தி ஸ்தாபனம்

சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் (IV ஆந் தர பதவி) [ஆங்கிலம்]

சம்பளமும் படிகளும் :—ரூபா 325—7×10—ரூபா 395 மாதத்திற்கு (திரட்டியது)

விண்ணப்பப் பத்திரங்களையும், தகைமைகள் பற்றிய விபரங்கள், சேவை நிபந்தனைகள் ஆகியவற்றையும் நேர்முகமாகவோ அல்லது தலைவர், அணுசக்தி ஸ்தாபனம், இல. 46, கிறகோரி வீதி, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு முத்திரையிடப்பட்ட, சொந்த முகவரியிட்ட 9"×4" அளவுள்ள கடித உறைகளை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களுக்கான கடைசித்தேதி :—15 ஏப்ரல், 1973.

3-874—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### தேசிய பார்ச்சபை

#### தொழிற்சாலை எந்திரவியலாளர் தரம் III

சபையின் சேவையிலுள்ள தொழிற்சாலை எந்திரவியலாளர் தரம் III ன் பதவிக்கு ஸ்ரீ லங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்திலே உள்ளபடி நிரப்பப்பட்டுக் கீழே கையொப்பமிட்டவருக்கு 1973.04.10 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் படியாக அனுப்பவேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—

ரூபா 1,000—10×50—ரூபா 1,500 மாதாந்தம் (எல்லாம் உட்பட)

3. தகமைகள்.—

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அவர் பின்வரும் தகமைகள் உள்ளவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும் :—

(1) 1973.04.10 அன்று 40 வயதிற்கு மேற்படாதவர் ;

(2) நல்ல ஒழுக்கமும் திடகாத்திரமும் உடையவர் ;

(3) (அ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் எந்திரவியலில் பட்டம் பெற்று, எந்திரவியலில் குறைந்தது 5 வருட அனுபவம் உடையவர் ;

அல்லது

(ஆ) பொறியியல் எந்திரவியலாளர் (லண்டன்) பரீட்சையில் 1 ம் 2 ம் பகுதிகள் சித்தியடைந்து எந்திரவியல் வேலையில் குறைந்தது 5 வருட அனுபவமுடையவர்.

4. சேவை நிபந்தனைகள்.—

(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். திணைக்கள கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய காலஎல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசாங்க மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

5. ஒப்பந்த நிபந்தனைகள்.—

இப்பதவி நிரந்தரமானது. அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சகாயநிதி நன்மைக்குத் தகுதி உடையவர்.

6. பிணை.—

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் பிணைகட்டுமாறு வேண்டப்படுவர்.

7. மருத்துவச் சோதனை.—

சபையின் மருத்துவ அலுவலரால் நடத்தப்படும் மருத்துவ சோதனையில் நியமனம் பெறுபவர் சித்தியெய்துதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் (மூலங்கள் அல்ல) பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பி.கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.)

(ஆ) பெறப்பட்ட மிகக் கூடிய கல்வித் தகமை உயர் தொழிலுக்குரிய தகமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர், கல்லூரிப் போதகாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், பார்ச்சபை, த.பெ. எண் 1155, கொழும்பு 5, என்ற விலாசத்திற்கன்றி சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

தலைவர்,
பார் சபை.

பார்ச்சபைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. எண் 1155,
கொழும்பு 5,
06, மார்ச், 73.

#### விண்ணப்பப் படிவம்

#### தொழிற்சாலை எந்திரவியலாளர் தரம் III

1. முழுப் பெயர் :————.
2. தனிப்பட்ட முகவரி :————.
3. விண்ணப்பதாரரின் பிறந்த திகதியும் இடமும் :————. (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறப்பிடம் : ————.
5. உயர் கல்வித் தகமைகள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
6. உயர் தொழிலுக்குரிய தகமைகள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
7. சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் அறிவு :————.
8. முன் அனுபவ விபரங்கள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) வேலை செய்த நிறுவனத்தின் பெயர் :———— பதவி :————. சேவைக் காலம் :————. தொடக்கம் :————. முடிவு :————.
9. தற்போதய உத்தியோக விபரங்கள் :— நிறுவனத்தின் பெயர் :————. பதவி ————. சேவைக் காலம் :————. தொடக்கம் :————. முடிவு :————.
10. விண்ணப்பதாரரின் குண நலன் சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்கள் :————.

திகதி :————. ————, விண்ணப்பதாரரின் கையொப்பம்.

3-795—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

***உப அஞ்சல் அதிபர் பதவி—கல்வி அமைச்சு தரம் "ஏ"***

*கொழும்பு 2, கல்வி அமைச்சு, உப அஞ்சல் அதிபர் பதவிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த மாதாந்தப் படி ரூபா 75/- ஆகும்.*

*1. விண்ணப்பதாரர்கள் 1.5.73 ந் திகதியன்று 21 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், 45 வயதிற்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. விண்ணப்பதாரர்கள் மாநகர சபை எல்லைக்குள் 10 வருடங்கள் அல்லது அதற்குக் கூடுதலாக நிரந்தரமாக வசித்தவர்களாக இருத்தல் வேண்டும். உப அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் உள்ள வட்டாரம் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*3. சிங்கள மொழி/தமிழ் மொழியுடன் எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தக கணிதம்/உயர்கணிதம்/பியோக கணிதம்/கணக்கியல் உட்பட குறைந்தது 3 பாடங்களில் சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில்/க. பொ. த. பரீட்சையில் (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*4. கொழும்பு 1, (கொழும்பு தெற்கு) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெறக்கூடிய அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்களைத் தயாரித்து 1.5.73 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ அவரை அடையக் கூடியவாறு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.*

*கொழும்பு 1, (கொழும்பு தெற்கு) பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*சி. ஜே. சேரசிங்க,*
*பதில் அஞ்சல் அதிபர் நாயகமும்*
*தொலைத் தொடர்புப் பணிப்பாளரும்.*

*3-922—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52*

---

*எனது எண் : பொ. நி./14/189*

**கல்வி அமைச்சு**

*கனிட்ட தொழில்நுட்பநிலைய அதிபர் பதவிகளும் பல்தொழில் நுட்பநிலைய அதிபர் பதவிகளும்*

*கல்வி அமைச்சின் கீழுள்ள கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபர் பதவிகளுக்கும் பல் தொழில் நுட்ப நிலைய துணை அதிபர் பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சுக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) **1973** ஆம் ஆண்டு எப்றில் மாதம் **24** ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக புதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " கனிட்ட தொழில் நுட்ப நிலைய அதிபர் பதவிகளும் பல்தொழில்நுட்ப நிலைய துணை அதிபர் பதவிகளும் " என அடையாளமிடப்பட வேண்டும்.*

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**— *இப்பதவி நிரந்தரமானது. தெரிந்தெடுக்கப்படுபவர் ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவியொன்றை வகிக்காதவராயின் அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணஞ் செலுத்த வேண்டும். தெரிந்தெடுக்கப்படுபவர், நியமனத் திகதியன்று, அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவி வகிப்பவராயின், புதிய பதவியிலும் அவ்வுரித்துக்கள் தொடர்ந்தும் கிடைக்கும். தெரிந்தெடுக்கப்படுபவர் ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் பதவி வகிக்காதவராயின், முதற்கண் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் கடமையாற்றுவார். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான பதவி வகிப்பவர் தெரிவுசெய்யப்படின் அவரது நியமனம் ஓராண்டு காலத்துக்குப் பதிற் கடமை புரியும் பாணியில் அமையும்.*

**3. சம்பளமும் படிகளும்.**—*இப்பதவிகளுக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—*

**ரூ. 11,040—7/480—14,400).**

**(1.10.69** *க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் ரூ.* **8,400—6/480—11,280** *ஆக இருந்தது.*

**4. தேவைப்படும் தகைமைகள்.**—*விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளவரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—*

(அ) *நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராக இருக்க வேண்டும் ;*

(ஆ) **24.4.1973** *அன்று* **30** *வயதுக்குக் குறையாதவராயும்* **45** *வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதெல்லைகள் அமையமாட்டா) ;*

(இ) *பின்வரும் பாடங்களுள் ஒன்றில், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும் :—*

(i) *எந்திரவியல்.*

(ii) *கணிதம் அல்லது விஞ்ஞானம்.*

(iii) *வாணிகவியல்.*

(iv) *பொருளியல்.*

(v) *விவசாயம் (விவசாயம் பிரதானமாகக் கற்பிக்கப்படும் நிலையங்களைப் பொறுத்தளவில் மாத்திரம்).*

(ஈ) *கற்பித்தலிலும் நிர்வாகத்திலும் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;*

(உ) *சிங்களத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும் (யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்படுபவராயின் தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்) ;*

**குறிப்பு.**—(i) *விவசாயம் பிரதானமாகக் கற்பிக்கப்படும் நிலையங்களைத் தவிர்ந்த ஏனைய நிலையங்களுக்கு நியமிக்கப்படுபவர்களைப் பொறுத்தளவில் எந்திரவியல் அல்லது விஞ்ஞான பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

(ii) *ஒரு பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள விரிவுரையாளராக பெற்றுள்ள அனுபவம், அப்பதவிக்குரிய கடமைகள் நேரசூசிகள் தயாரித்தல், உதவியாளர்களிடையே வேலை ஒதுக்குதல், பரீட்சைகளை நடாத்துதல் ஆகியவற்றை அடக்குமாயின் அது நிர்வாக/நிறைவேற்று அல்லது இவ்விரு வகையினதான அனுபவமாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

(iii) *பல்தொழில்நுட்ப நிலையங்களிலும் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களிலும் தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு, அவர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் யாவற்றையும் பெற்றிருக்குமிடத்து முதன்மை வழங்கப்படும்.*

5. *பின்வரும் சாதனங்களுள் எதனையேனும் அல்லது எல்லாவற்றையேனும் தேவைப்படும் நேரத்தில் சமர்ப்பிக்கவேண்டும் :—*

(அ) *பிறப்புச் சான்றிதழ்* (**மு. கு.**—*ஞானஸ்நானப் பத்திரங்களும் கல்விப் பிரமாணங்களின் பிரகாரம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் உபயோகத்தின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச்சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;*

(ஆ) *பெற்றுள்ள பட்டம் அல்லது ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;*

(இ) *ஒழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு—இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது கல்லூரி அதிபர் வழங்கியதாய் இருக்க வேண்டும் ;*

(ஈ) *உயர்தொழில்/தொழில்நுட்ப தகைமை பற்றிய தராதரப் பத்திரம் ;*

(உ) *சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்துள்ள ஆக உயர்ந்த பரீட்சைத் தராதரப் பத்திரம்.*

**மு.கு.**—(i) *விண்ணப்பப் பத்திரத்துடன் சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் இணைத்தனுப்புதல் ஆகாது.*

(ii) *வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.*

6. *அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். மேலே விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், விதிக்கப்பட்ட திகதிக்கு முன் அது திணைக்களத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

7. *விண்ணப்பப் பத்திரங்களையும் அவற்றோடு தொடர்பான சகல கடிதப் போக்குவரத்துக்களையும் கல்வியமைச்சின் செலாளருக்கு அனுப்ப வேண்டுமேயன்றி இவ்வமைச்சின் எந்த ஒரு உத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கும் அனுப்பலாகாது.*

8. இந்த வர்த்தமானியின் I ஆம் பிரிவின் (IIஅ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவைப் பதவி நியமனங்கள் தொடர்பாக அமையும் பொது நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரிகளின் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வலுவலகத்திற் கிடைத்தவுடன் அதுபற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சின் செயலாளர்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1973 ம் ௵ மார்ச் ௴ 08 ந் ௳.

**(மாதிரி விண்ணப்பப் படிவம்)**

(8½" × 13" அளவுத்தாளில் தயாரிக்கப்பட்ட வேண்டும்)

**கல்வியமைச்சின் கீழுள்ள பல்தொழில் நிலையங்களில் அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு/திருமதி/செல்வி———.

2. முழுப்பெயர் : ———.

3. உத்தியோக முகவரி : ———.

4. சொந்த முகவரி : ———.

5. (அ) இலங்கைப் பிரசையா என்ற விபரம் : ———.
(ஆ) அவ்வாறெனின் வம்சாவழி மூலமா பதிவு மூலமா ? : ———.

6. பிறந்த தேதி : ———. வருடம் : ———. மாதம் : ———. நாள் : ———.

7. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் தேதியன்றுள்ளபடி வயது : ———. வரு : ———. மா : ———. நா : ———.

8. தற்போது வகிக்கும் உத்தியோகம் பற்றிய விபரம் :—
(அ) பதவி : ———.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா : ———.
(இ) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா அற்றதா ? : ———.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? : ———.
(உ) திணைக்களத்தின் பெயர் : ———.
(ஊ) நிலையம்/பணிபுரியும் ஸ்தானம் : ———.
(எ) திரட்டிய ஆண்டுச் சம்பள அளவுத்திட்டம் : ———.
(ஏ) தற்போது பெறும் திரட்டிய ஆண்டுச் சம்பளம் : ———.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரம் :—
(சிங்கள மொழித் தேர்ச்சி/தமிழ் மொழியிற் பெற்றுள்ள தராதரம் உட்பட)

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| தராதரப் பத்திரம் | தராதரப் பத்திரம் வழங்கிய நிலையம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக்கல்வி கற்ற நிலையங்கள் :

| நிலையம் | வகுப்பு/தரம் | தொடக்கம் வரை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் வரை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

13. முன்னர் வகித்த பதவிகள் :—
(சரியான தேதிகளுடன் சேவை செய்த காலக் கிரமப்படி குறிப்பிடுக)

| திணைக்களம் | நிலையம்/உத்தியோக இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

14. ஏதாவது குற்றச்செயல் பற்றிய முறைப்பாட்டின் பேரில், நீதிமன்றத்தினால் உம்மீது குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா ? (அவ்வாறாயின் விபரம் தருக) : ———.

15. நீர் அரசாங்க பதவி வகிக்கையில் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டீரா ?
(அவ்வாறாயின் விபரம் தருக)

16. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவிற்கு : ———.

17. இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களுள் எவையேனும், பொய்யானவை அல்லது பிழையானவை எனப்படு நான் நியமிக்கப்படுவதற்கு முன்னர் வெளியாயின் தகுதியற்றவனாக்கப்படுதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் வெளியாயின் எவ்வித நஷ்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் நான் அறிவேன்.

———,
திகதி : ———. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

3–828—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**அம்பாறை மாவட்டத்தில் கரவாகு நிந்தவூர்ப் பற்றுப் பிரிவுக்கு கல்முனைக்குடிப் பகுதியில் காரியாலயம் அமைக்கும் முஸ்லீம் விவாகப் பதிவுகாரர் பதவி**

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோருதல் தொடர்பாக 24 ம் இலக்க 08.09.72 ந் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை, 1973 ம் ௵ மார்ச் ௴ 09 ௳.

3–841—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

ஆயுள்வேத திணைக்களம்

நூல் நிலையப் பொறுப்பாளர் பதவி—தொகுப்பு III

ஆயுள்வேத திணைக்களத்தின் III ஆம் தொகுப்பு நூல் நிலையப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன்கீழ் கொடுக்கப்பெற்றுள்ள மாதிரிப் படிவங்களில் செய்யப்பெற்று 1973.04.07 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆயுள்வேத ஆணையாளர், கொட்டா வீதி, கொழும்பு-8 என்ற முகவரியில் வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

2. சேவை நியதிகள்.—இப்பதவி நிரந்தரமானது. நியமனம் அ. சே. ச. நி. அடிப்படையில் செய்யப்படும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு. ஆண்டொன்றுக்கு ரூபா. 6,600—180—8,040.

4. கல்வித் தகைமைகளும் பிறதகைமைகளும்.—ஒவ்வொரு அபேட்சகரும் தான்.—

(அ) சிறந்த நன்நடத்தை உடையவரென்றும்.

(ஆ) 1973.04.07 ஆந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவரென்றும் 45 வயதுக்கு மேற்படாதவரென்றும்.

(இ) (i) இலங்கை நூல் நிலையச் சங்கத்தின் மத்திய தரப் (இன்ரமீடியற்) பரீட்சையின் சித்தி அல்லது கனிட்ட பல்கலைக்கழகமொன்றின் நூல் நிலைய விஞ்ஞானத்தில் வழங்கப்படும் டிப்ளோமா பட்டம் அதற்குச் சமமான தகைமையுடையவரென்றும் ;

(ii) அரசாங்கத்தின் கீழ் அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட தாபனத்தின் கீழ் 10 வருடத்துக்குக் குறையாத நூல் நிலைய வேலையில் செய்முறை அனுபவமுடையவரென்றும் திருப்திகரமான சான்றழித்தல் வேண்டும் ;

(iii) சமஸ்கிருத மொழியில் அறிவுடைமை கூடுதலான தகைமையாயிருக்கும்.

5. விண்ணப்பகாரர்கள் தங்கள் விண்ணப்பங்களோடு பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானச் சான்றிதழ், உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பட்டம் அல்லது உயர் கல்விப் பத்திரங்கள்.

(இ) நடத்தை பற்றிய இரு சான்றிதழ்கள்.

(ஈ) உயர் தொழிற்றராதரப் பத்திரங்களின் பிரதிகள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் சித்தி பெற்ற ஆகக் கூடிய பரீட்சைகளின் பத்திரங்கள்.

குறிப்பு.—விண்ணப்பங்களோடு இணைக்கப்படும் சாதனங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களது தலைவர்களுக் கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை தொடர்பான கடிதத் தொடர்புகளும் ஆயுள்வேத ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக் கூடாது.

8. அரசாங்க செய்தி மடலின் I ஆம் பகுதி (II அ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதும் அரசாங்க சேவை பதவி நியமனங்களுக்கும் பொருத்தமான நிபந்தனைகள் இப்பதவிக்கும் ஏற்புடையனவாக அடிமையும்.

டபிள்யு. பி. வெவேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேதத் திணைக்களம்,
கொட்டா வீதி,
கொழும்பு-8.
1973.02.28.

மாதிரிப் படிவம்

ஆயுள்வேத திணைக்களம்

நூல் நிலையப் பொறுப்பாளர் பதவி—தொகுப்பு III

1. (அ) முழுப் பெயர்.————,

(ஆ) முதற் பெயர்.————.

(இ) பிற பெயர்கள்.————.

2. முகவரி.————.

3. (i) பிறந்த திகதி.————.

(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).

(ii) 1973.04.07 ஆந் திகதியன்று சரியான வயது.————. வருடம்.————. மாதங்கள்.————. நாட்கள் ————.

4. கல்வித் தகைமைகள்.————.
(பத்திரங்களின் பிரதிகளை இணைக்கப்படல் வேண்டும்).

5. உயர் தொழிற்றகைமைகள்.————.
(பத்திரங்களின் பிரதிகளை இணைக்கப்படல் வேண்டும்).

6. நூல் நிலைய வேலையில் அனுபவம்.————.
(நிலையம், காலம், சேவை ஆகியவை குறிப்பிடப்படல் வேண்டும். பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

7. விண்ணப்பகாரர் இலங்கையரா என்பது.————.
(பதிவினாலா வம்சாவழி காரணமாகவோ எனக்குறிப்பிடுதல் வேண்டும்).

8. பிறந்த இடம்.————.
விண்ணப்பகாரர்.————.
தகப்பன்.————.
தந்தைவழிப்பேரன்.————

9. தற்போதைய தொழிலும் சேவை செய்யுமிடமும்.————.

10. முன்னர் வகித்த பதவிகள் (ஏதுவுமிருந்தால்).————.
(பதவிகள், காலங்கள், சேவையிலிருந்து நிறுத்தப்பட்டதற்குக் காரணம் ஆகியன).

11. நடத்தை பற்றிய சான்றிதழ்கள் யாரிடம் பெறப்பட்டன—அவருடைய பெயர்களும், விலாசங்களும்.————.

1. ————. 2. ————
————. ————.
————. ————.

12. குறிப்புகள்.————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். இதன் கண் காணப்படும் விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் தகைமை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடெதுவுமின்றி சேவை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி.————.

3-910—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு உயர்ச்சியளிப்பதற்காய வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை—1973

பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு உயர்ச்சியளிப்பதற்காய வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளரால் 1973 யூன் மாதம் 2 இலும் 3 இலும் கொழும்பில் நடாத்தப்படும்.

2 இப்பரீட்சையின் பெறுபேறுகளிலிருந்து நிரப்பப்படுவதற்குள்ள, பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிலுள்ள வெற்றுப் பதவிகளினெண்ணிக்கையும், அத்தகைய வெற்றுப்பதவிகளை நிரப்புந் தேதியும் உரிய காலத்தில் அரசாங்க நிருவாக உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சினால் தீர்மானிக்கப்படும். சித்தியடையும் பரீட்சார்த்திகளில் ஒருவரோ பலரோ அத்தகைய நியமனம் செய்யப்படும் காலத்தில் நடைமுறையிலிருக்கும் அரசகரும மொழி ஒழுங்கு விதிகளில் ஏற்பாடுகளின் கீழும் அல்லது திருப்திகரமற்ற வேலை அல்லது நடத்தையினாலும் தகவற்றவரெனக் கருதப்பட்டால், அவர்களை அங்ஙனம் நியமிக்காதுவிடும் உரிமையையும் அரசாங்க நிருவாக உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சு தன்மாட்டுக் கொண்டுள்ளது.

3. **பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முறை.**—(அ) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை 1973, ஏப்பிரல் மாதம் 05 ஆந் தேதி முதல் 1973, ஏப்பிரல் 21 ஆந் தேதி வரை பரீட்சை ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு படிவத்திற்கு மேல் கொடுக்கப்படமாட்டாது. அச்சிடப்பட்ட படிவங்களை பரீட்சார்த்தியின் எழுதிக்கேட்கும் வேண்டுகோளின்படி பரீட்சை ஆணையாளர் அனுப்புதற்கு, சொந்த முகவரியெழுதப்பட்ட, முத்திரையொட்டப்படாத, 9" × 4" அளவினதான கடித உறையொன்று பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இக் கடித உறையின் மேல் இடதுபக்க மூலையில் "விண்ணப்பப் படிவம்—பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு உயர்ச்சிக்காய வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை" என்னும் தலைப்பு எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) (i) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர், த. பெ. இல. 1503, கொழும்பு 2, என்னும் முகவரியை 1973, ஏப்ரல் மாதம் 23 ஆந் தேதிக்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் தள்ளப்படும். பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை முடிவு தேதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளரைச் சென்றடையத் தக்கதாக அவற்றைத் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எல்லா வகையிலும் நிறைவுடையன என்று திணைக்களத் தலைவர்கள் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்; அவர்கள் விண்ணப்பப் படிவத்திலுள்ள சான்றிதழில் கைச்சாத்திட வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கோ அவரின் திணைக்கள உத்தியோகத்தர் எவருக்குமோ நேராக விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகாது. விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் உறையின் மேற்பக்க மூலையில் பரீட்சையின் பெயர்: "பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு உயர்ச்சிக்காய வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை" என்பது எழுதப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் எல்லா வகையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். கேட்கப்பட்ட எல்லா விபரங்களும் கொடுக்கப்பட்டிராவிடின், அங்கு குறிக்கப்பட்ட விபரங்களைத் தீர்மானித்த பின்பு விண்ணப்பங்களை நிராகரிப்புக்கு உள்ளாக்கக்கூடும்.

(இ) (i) இப்பரீட்சைக்கு கட்டணம் 50 ரூபாவாகும். இக்கட்டணம் விண்ணப்பம் முடியும் தேதிக்கு முன்னர் சமீபத்திலுள்ள கச்சேரிகளில் அல்லது கொழும்பு பொதுத்திறைசேரியில், தலைப்பு 6, உப-தலைப்பு 2, இனம் 5 என்பதில் இறைவரிக்கு வரவு கட்டப்படல் வேண்டும். கச்சேரியினது அல்லது திறைசேரியினது பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—ஏதேனுமொரு காரணத்தால் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றாதுவிடின் அல்லது விண்ணப்பத்தை மீளப் பெற்றாலும் அல்லது பரீட்சைக்குத் தோற்றத் தகவற்றவராயிருந்தும் பரீட்சைக்குத் தோற்றினாலும் அப்பரீட்சார்த்தி கட்டணம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் மீளப் பெறுதற்கு உரித்துடையவராகார்.

(ii) இப்பரீட்சைக்கு முதற் தடவை மட்டும் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதாவது முன்னொரு தடவை பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்கு நியமிப்பதற்காய போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்களே.

(ஈ) விண்ணப்பப்படிவமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணமற் போய் விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்துவாராயின் அது அவர்கள் பொறுப்பாகும்.

(உ) விண்ணப்பப்படிவத்துடன் இணைந்துள்ள அஞ்சல் அட்டையில் பரீட்சார்த்திகள் தங்கள் பெயரையும் விலாசத்தையும் மாத்திரம் எழுதுதல் வேண்டும். இது விண்ணப்பம் பெற்றுக்கொண்டமையை ஒப்புக்கொள்வதற்கு உபயோகிக்கப்படும். தமது பெயரையும் விலாசத்தையும் கூறாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா. பரீட்சார்த்தியொருவர், தமது பெயரையும் விலாசத்தையும் கூறியும், விண்ணப்ப முடிவு தேதிக்கு 3 கிழமைகட்குப் பின்னர் ஒப்புக்கோடலைப் பெறாவிடில் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டுக்கு இணங்கி ஒழுகத் தவறினால் பரீட்சார்த்தி பரீட்சையெடுக்கும் உரிமையை இழக்க நேரிடும்.

4. **பரீட்சைக்கு அனுமதி.**—(அ) பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்குத் தங்கள் அனுமதிப்பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரங்களைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு நிலையத்தில் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தன்று தமது அனுமதிப்பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும். இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளின் விதிகள் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

(இ) பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறாவிடின் அவர் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருடன் த. பெ. இல. 1503, கொழும்பு 2 (தந்தி முகவரி, "எக்சாம்ஸ்" கொழும்பு) என்னும் முகவரிக்குக் கடிதத் தொடர்பு கொண்டு, அனுமதிப்பத்திரத்தைத் தான் பெறவில்லையென அறிவித்துப் பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும் :—

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(iii) முகவரி ;

(iv) அஞ்சல் அலுவலகமும் பதவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

(ஈ) பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவது தகுதியுடைமையை ஒப்புக்கொண்டதாகாது. எனினும், பரீட்சை ஆணையாளர் தமது தற்றுணிபின்படி பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சை எடுப்பதற்கு தற்காலிக அனுமதி அளிக்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சை எடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

5. **தகவுத் திறன்.**—பொது எழுதுநர் சேவையில், தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட, 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆந் தேதியன்று அச்சேவையில் எட்டு ஆண்டுக்குக் குறையாத திருப்திகரமான சேவை செய்துள்ள உத்தியோகத்தர்கள், இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகவுடையவராவர்.

குறிப்பு.—திருப்திகரமான சேவைப் பதிவுடைய பரீட்சார்த்திகளே போட்டிக்குத் தகுதியுடையவராவர். திருப்திகரமான சேவைப் பதிவுடையவரெனக் கருதப்படும் பரீட்சார்த்தியாவது—1973 ம் ஆண்டு பெப்ரவரி 1 ந் தேதிக்கு முந்திய 5 வருட காலத்திற்குள் எல்லாச் சம்பள உயர்வுகளையும் உரிய காலத்தில் பெற்றவராவர். அத்துடன் அதே 5 வருடகாலத்திற்குள் ஏதாவது ஒழுங்குமுறைத் தண்டனை (எச்சரிக்கைகள் தவிர்த்து) விதிக்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வைந்து வருட காலத்திற்கு முந்திய காலத்தில் ஏதாவது ஒழுங்குமுறைத் தண்டனை பெற்றிருந்தால் அல்லது அவர் வேலையில் அல்லது நடத்தைபற்றி மாறான குறிப்பு இடப்பட்டிருக்குமேயானால் வாய்மொழிப் பரீட்சையில் புள்ளிகொடுக்கப்படும்போது கருத்திற்கொள்ளப்படும். எப்படியா

யினும் நேர்மையின்மைக்கு அல்லது இழிந்த நடத்தைக்கு அவரின் சேவைக் காலத்தில் தண்டிக்கப்பட்டிருந்தால் அவர் இப்பரீட்சையில் போட்டியிடத் தகவற்றவராக்வும், தெரிவு செய்யப்படுதற்கும் தகற்றவராவர்.

6. அடையாளச் சீட்டுக்கள்.—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காகப் பின் வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாளச்சீட்டு;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்);

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஒரு அரசாங்க திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நியதிச் சட்டமுறையான தாபனம் ஒன்றின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்;

(ஈ) கடவுச் சீட்டின் அளவுள்ள புகைப்படம் (அதன் பின்பக்கத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு, புகைப்படமும் கையொப்பமும் பரீட்சார்த்தியினுடையது தான் என்று திணைக்களத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மேற்பார்வையாளரால் இப்புகைப்படம் வைத்துக்கொள்ளப்படும்);

(உ) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் கொடுக்கப்பட்ட அடையாளச் சீட்டு.

7. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபாரதம் :—

(அ) இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக்காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்போதுதோ, பரீட்சைக்குப் பின்னரோ எந்நிலையிலாவது அவரது பரீட்சார்த்தித் தன்மை நீக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்குட்பட்ட பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

8. பரீட்சைத் திட்டம்.—பின்வரும் பாடங்களை எடுக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர் :—

| | | |
|---|---|---|
| (1) அலுவலக முகாமை | ... | 100 புள்ளிகள் |
| (2) அலுவலக ஒழுங்கு முறைகள் | ... | 100 புள்ளிகள் |
| (3) கணக்கீட்டு ஒழுங்கு முறைகள் | ... | 100 புள்ளிகள் |
| (4) தாபன வேலை | ... | 100 புள்ளிகள் |
| (5) வாய்மொழிப் பரீட்சை | ... | 50 புள்ளிகள் |
| மொத்தம் | ... | 450 புள்ளிகள் |

ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட நேரம் 2 மணித்தியாலங்கள் மட்டுமே. எழுத்துப் பரீட்சையில் போதியளவு உயர்தரத்தினை எய்தும் பரீட்சார்த்திகள் மட்டுமே வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். வாய்மொழித் தேர்வுகள் நடாத்தும் சபைகளுக்கு எழுத்துப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் கொடுக்கப்படமாட்டா.

9. பரீட்சை மொழி.—பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள், பொது எழுதுநர் சேவையில் சேர்வதற்குரிய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது போட்டிப் பரீட்சையின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்வதற்கு தகைமை பெற்ற மொழியில் இப்பரீட்சைக்கு விடை எழுதுதல் வேண்டும். எனினும், பரீட்சார்த்திகள் தாம் விரும்பினால் சிங்கள மொழியில் இப்பரீட்சையில் விடை எழுதலாம். குறிக்கப்பட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முடிவுத் தேதிக்குப் பின் மாற்றம் ஏதும் செய்ய அனுமதியளிக்கப்படாது.

10. 1971 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 29 ஆந் தேதிய இல. 14,977/9 ஐக் கொண்ட இலங்கை அரசாங்க அதி விசேஷ வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, பொது எழுதுநர் சேவையில் அதி சிறப்பு வகுப்புப் பதவிகளுக்குரிய நியமனங்களில், சேவை நியதிகளும், வேதனத்திட்டமும் காலத்துக்குக் காலம் மாற்றத்துக்குள்ளாகக் கூடியன.

11. இப்பிரமாணங்களினால் ஏற்படுத்தப்படாத யாதேனும் விடயம் அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் தன்மதியினற் றீர்க்கப்படும்.

பி. மகாதேவா,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரும் பதில் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் நாயகமும்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7,
1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ஆந் தேதி.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விருப்பின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சாத்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டு பண்ணாமல் நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்துள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளேயோ வேறெவ்விதப் பொருளேயோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்வர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறி விடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத் தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக்கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு—

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதிவிடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

எச். எல். விமலசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

3-986—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*ஏப்ரில் 1973 இலும் அதற்குப் பின்னரும் நடைபெறும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை—வைத்தியப் பிரிவுக்கு அநுமதிக்கான விசேட தேவைகள்—இரசாயனம்*

வைத்திய, பல்வைத்திய நெறிகளுக்கு அநுமதிகோரி விண்ணப்பிக்கும் சகல மாணவர்களும் இரசாயன வினாத்தாள் II இல் உள்ள 'அ', ஆ II ஆம் பகுதியிலுள்ள சேதனவுறுப்பு இரசாயன வினாக்களில், அவ்வினாக்களுக்கென ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்த பட்சம் சாதாரண சித்தி நிலையையேனும் அடைந்திருத்தல் வேண்டும் என எல்லா பாடசாலைத் தலைவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும், இத்தால் அறிவிக்கப்படுகிறார்கள்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
கொழும்பு 2,
08.03.73.

3-915—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | 2.3.73 | வெள்ளி | 21. 2.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 9.3.73 | வெள்ளி | 28. 2.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 16.3.73 | வெள்ளி | 7. 3.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 23.3.73 | வெள்ளி | 14. 3.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 30.3.73 | வெள்ளி | 21. 3.73 | புதன் | ந. ப. | 12.00 |
| **ஏப்பிறல்** | 6.4.73 | வெள்ளி | 28. 3.73 | புதன் | ந. பு. | 12.00 |
| | 11.4.73 | புதன் | 4. 4.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11. 4.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18. 4.73 | புதன் | ந. ப. | 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 29 ந் வ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.